பதிவு எண் : M. 6311 ★ தொலைபேசி : 51331 ★ சிறுவியது : 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர் : இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர் : 15] சென்னை : ஐப்பசி 11உ (28—10—67) சனி

வெளியூர் : ஐப்பசி 12உ (29—10—67) ஞாயிறு [இதழ் : 113

காங்கிரசுக்குப் பாடம் புகட்ட தமிழகமே தக்க இடம்!

சென்னை, அக். 28—

"நடைபெறுகின்ற இடைத் தேர்தல்களில்—குறிப்பாகக் காங்கிரசல்லாத ஆட்சி நடக்கக்கூடிய இடங்களில்—காங்கிரசு முறியடிக்கப்பட வேண்டும்! எங்கும் காங்கிரசு பலமடைய அனுமதிக்கக்கூடாது! படுதோல்வி அடையும்படிச் செய்யவேண்டும்!

"பொதுத் தேர்தலில் படுதோல்வியடைந்தும் காங்கிரசு திருந்தவில்லை! எந்தக் கொள்கைகள் காங்கிரசின் வீழ்ச்சிக்குக் காரணமாயிருந்தனவோ, அவற்றையே இன்னும் காங்கிரசு விடாப்பிடியாகப் பிடித்துக்கொண்டிருக்கிறது.

"மத்திய அரசிடம் அதிகாரங்கள் குவிந்துள்ளன! பலம் குன்றி மதிப்பிழந்த நிலையிலும், காங்கிரசு இன்னும் மத்திய அரசில் இருக்கிறது!

"அது கடைபிடித்துவரும் தவறான பொருளாதாரக் கொள்கைகளால்தான், விலைவாசிகள் உயர்ந்தபடி உ[illegible]ன! காமராசர் இவற்றை அறிந்தும், அறியாதவர்போல் [illegible] அரசுகளைக் குற்றஞ்சாட்டி வருகிறார்!

"2 ஆண்டுகளுக்கு முன்பே அமுலுக்கு வந்திருக்க வேண்டிய நான்காவது ஐந்தாண்டுத் திட்டம் இன்னும் இருக்குமிடம் தெரியவில்லை! இருந்தும் 'இன்றைய பொருளாதாரக் கேடுகளுக்கு மாநில அரசே காரணம்' என்று இடைத் தேர்தல் நடக்கும் இச்சமயத்தில் காங்கிரசுக்காரர்கள் பிரச்சாரம் நடத்திவருவதாக அறிந்து ஆச்சரியமடைந்தேன்!

"மாநில அரசுகள்—குறிப்பாகக் காங்கிரசல்லாத மாநில அரசுகள், தங்களால் இயன்ற அளவு நன்மைகள் செய்துவருகின்றன; ஆனால், மத்தியில் சில மிகத் தீவிர சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டாலன்றி, மாநில அரசுகள் மட்டுமே அதிக முன்னேற்றம் காண முடியாது!

"இப்போதுள்ள அரசியல் அமைப்பு ஏற்பாட்டின்படி, வருவாயில் பெருமளவு அதிகாரங்களும் மத்திய அரசிடமே குவிந்து கிடக்கின்றன! இந்த ஏற்பாடு மாற வேண்டும்! வருவாய் மாநிலங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்!

"மத்திய ஆட்சியில் காங்கிரசு கடைபிடித்துவரும் கொள்கையால், நாட்டில் ஒற்றுமையை ஏற்படுத்துவதற்குப் பதிலாகச் சீர்குலைவையே உண்டாக்கிவந்துள்ளது! இந்தித் திணிப்பு, அத்தகைய ஒரு தவறான நடவடிக்கையாகும். திணிப்பை நாங்கள் எதிர்க்கிறோம்.

"தி.மு. கழக அரசு நன்றாகச் செயல்பட்டு, சாதனைகள் பல புரிந்துவருகிறது என்பதறிந்து மகிழ்ச்சியடைகிறோம்! வெற்றிகள் பல பெற்று இந்த ஆட்சி சிறக்க வேண்டும்!

"மக்கள் இந்த நல்லாட்சியிடம் தங்களுக்குள்ள நம்பிக்கையைத் தெரிவிக்கும் வகையில் காங்கிரசுக்குப் படுதோல்வியை உண்டாக்குவார்கள் என்று நம்புகிறேன்.

"மத்தியில் காங்கிரசு மிகக் குறுகிய பலத்தில் ஆட்சி நடத்திவருகிறது! ஐந்தாண்டு முழுவதற்கும் அது பதவியிலிருக்குமா என்பது சந்தேகம்! இந்த நிலையில் அதன் பலத்தைக் கூட்டிடத்தக்க முயற்சியில் ஈடுபடாதீர்கள்! தி.மு.க. வேட்பாளரை, பெரும் அளவு வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெறச் செய்யுங்கள்! இந்தியாவில் எங்கேனும் காங்கிரசு படிப்பினை பெற முடியுமானால் அது இங்கேதான்—இந்த இடைத் தேர்தலில்தான் என்பதனை, மீண்டும் நினைவுபடுத்துகிறேன்!"

---ஜோதி பாசு

(மேற்கு வங்கத் துணை முதலமைச்சர்; தியாகராயநகர் கூட்டத்தில்)

நக்சல்பாரி தலைவருக்கு ஆடம்பர உபசாரம்!

சிறைக் கைதிக்கு மேற்கு வங்க அமைச்சரின் 'அனுசரணை'?

மேற்கு வங்க மாநிலத்தில் அண்மையில் நடந்த நக்சல்பாரி கலகங்களுக்குக் காரணமான 'ஜோங்கல் சாந்தல்' என்ற தலைவருக்கு, சிறையில் முதல் வகுப்பு தரப்பட்டிருக்கிறது!

மார்க்சிய கம்யூனிஸ்டுக் கட்சியின் அமைச்சர் நிரஞ்சன் சென், இதற்கான உத்தரவை, தாமே நேரிடையாகக் கவனித்துக் கையெழுத்திட்டிருக்கிறார்!

உள்துறை இலாகா பொறுப்பு வகிக்கும் நிரஞ்சன் சென், அண்மையில், நக்சல்பாரி கலகக்காரர்கள் இருக்கும் டார்ஜிலிங் சிறைக்கூடங்களுக்குச் சென்று, 'சாந்தல்' உட்பட பல கலகத் தலைவர்களைச் சந்தித்திருக்கிறார்!

உணவு உற்பத்திக்கு ஊக்கமளிக்கும் நடவடிக்கை

இரண்டாம் போக சாகுபடிக்குத் தண்ணீர்த் தீர்வை நீக்கம்

சென்னை, அக். 27—

தஞ்சை மாவட்டத்தில், இதுவரை ஒரு போகம் சாகுபடி செய்துவந்த நிலத்தில் இரண்டாம் போகமாகக் குறுகிய கால நெற்பயிர் சாகுபடி செய்பவர்கட்குத் தண்ணீர்த் தீர்வை நீக்கப்பட்டது.

இத்தகவலை, உணவமைச்சர் திரு. கே. ஏ. மதியழகன், செய்தியாளர்களிடம் அறிவித்தார்.

முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள், இன்று உணவமைச்சருடனும், மற்ற அதிகாரிகளுடனும் கலந்து பேசிய பிறகு, இத்தண்ணீர்த் தீர்வையை நீக்கிவிட முடிவு செய்தார்.

முதல் போகத்தில் சாகுபடி செய்யப்படும் பயிருக்காக ஏக்கருக்கு ரூ. 10-ம், இரண்டாவது போகத்திற்கு ரூ 5-ம் தண்ணீர்த் தீர்வையாக நிர்ணயிக்கப்பட்டிருந்தது. இரண்டாவது தீர்வை இப்போது நீக்கப்படுகிறது.

"இந்தப் புதிய சலுகையால் உணவு உற்பத்தி மேலும் அதிகரிக்க ஊக்கம் பிறக்கும்"

என்று அமைச்சர் மதியழகன் நம்பிக்கை தெரிவித்தார்.

பத்து காசு 'ஸ்டாம்பு' ரூ.2-க்கு விற்பனை

ஒரிசாவில் அதிசயம்!

பத்துக் காசு மதிப்புள்ள ரெவினியூ 'ஸ்டாம்பு'கள், ஒரிசா மாநிலப் பகுதிகளில், ரூ. 2 வரையில் விற்கப்படுகின்றனவாம்!

கறுப்புச் சந்தையில் நடக்கும் இந்த அதிசயம், அண்மையில் புயல் விளைவித்த 'நாசங்'களில் ஒன்று எனக் கருதப்படுகிறது.

புயல்—வெள்ளப் பாழ்களுக்கு ஆளானோர், அரசினரிடமிருந்து உதவிப் பணம் பெறுவதற்காக மனுக்கள் போடுவதற்கு ரெவினியூ 'ஸ்டாம்பு'கள் அதிகம் தேவைப்படுகின்றன; எனவே, இந்த நிலையைப் பயன்படுத்திக்கொண்டு கறுப்புச் சந்தையில் ரெவினியூ 'ஸ்டாம்பு'கள், ரூ. 2 வரையில் விற்கப்படுவதாகத் தெரிகிறது!

5,000 லாரிகள்— 2,000 வாகன்கள்!

தஞ்சையில் அறுவடையாகிக் கொள்முதல் செய்யப்பட்டிருக்கும் குறுவை நெல்லை, சென்னை மற்றும் தேவைப்பட்ட தமிழக நகரங்களுக்கு அனுப்புவதற்காக 5,000 லாரிகளும், 2,000 இரயில் பெட்டிகளும் பயன்படுத்தப்படுகின்றன!

தஞ்சையில் இச்செய்தியை நிருபர்களிடம் தெரிவித்துள்ள மாவட்ட கலெக்டர்,

"இதுவரையில் கொள்முதல் செய்யப்பட்டிருக்கும் 55,000 டன் தானியத்தில், 40,000 டன் மாவட்டத்தை விட்டு அனுப்பப்பட்டாகிவிட்டன"

எனக் கூறியிருக்கிறார்.

ஆதிசங்கரர் வளர்த்த உல்லாசப் பயணம்!

மத்திய அமைச்சரின் கற்பனை நயம்!

ஆதிசங்கரரை, 'பயணத் துறையில் ஒரு முன்னோடியாக'வும் கண்டிருக்கிறார் — மத்திய அமைச்சர் டாக்டர் கரண் சிங்!

கோவலம் கடற்கரையில் கட்டப்பட இருக்கும் ஆடம்பர ஓட்டல் ஒன்றுக்கு அடிக்கல் நாட்டிப் பேசுகையில் கரண் சிங்,

"போக்குவரத்து வசதிகள் முற்றும் இல்லாத நிலையில் ஆதிசங்கரர், இந்தியாவின் ஒரு மூலையிலிருந்து மற்றொரு மூலைக்கும் சென்று மடங்களை நிறுவியிருக்கிறார்; இதனால், ஆங்காங்கிருந்து சுற்றுலாப் பயணிகள் வருவதற்கும் போவதற்கும் வழிவகைகள் பிறந்திருக்கின்றன; இந்த வகையில், சுற்றுப்பயணத் துறைக்கு முதன் முதலில் ஆதரவைத் தந்தவர் ஆதிசங்கரர்"

என்று குறிப்பிட்டிருக்கிறார்.

சரித்திரகால சம்பவம்!

★

அனைத்திந்தியக் காங்கிரசு நடத்தும் ஜபல்பூர் மாநாடு—அந்நகரில்—32 ஆண்டுகளுக்குப் பின்னர், இரண்டாவது முறையாக இப்போது நடக்கிறது!

ஆனால், அக்கட்சியின் சரித்திரத்திலேயே முதன் முறையாகத் தங்கள் ஆட்சி நடைபெறாத ஒரு இடத்தில் கூடுவது இதுவே முதல் தடவையாகும்!

மத்தியப் பிரதேசத்தில் நடப்பது காங்கிரசு அல்லாத நிர்வாகம்!

காங்கிரசு மாநாட்டுக்கு வரும் தலைமையமைச்சரை, முறையாக வரவேற்கும் பொறுப்பை பொதுப் பணி அமைச்சர் ஸ்ரீவத்சா என்பவரிடம், முதலமைச்சர் ஜி. என். சிங் ஒப்படைத்துள்ளார்!

காதால் கேட்டது!

பத்திரிகை படித்தவர் :—

"முன்னாள் மத்திய சுகாதார அமைச்சரைத் தலைவராகக் கொண்ட மது விலக்குக் கவுன்சில் கூட்டம் பொங்கலுக்குப் பின் சென்னையில் கூடுகிறதாமே?"

அதைக் கேட்டவர் :—

"பின்னே வேறெங்கே கூட்ட முடியும்?—மகாராட்டிரத்திலா? ஆந்திரத்திலா? மைசூரிலா? ஆளுவது என்னவோ, காங்கிரசுதான்; ஆனால், புழக்கத்தில் இருப்பது 'மது'வாக அல்லவா இருக்கிறது? எனவேதான் கழக நிர்வாகம் நடக்கும் சென்னையைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள்!"

★

"'பாங்கிகள் தேசியமயமாக்கப்பட வேண்டும்' என்ற தீவிரவாதிகள் தீர்மானம் தோல்வியடைந்து, 'வேண்டுமானால், சமுதாயக் கட்டுப்பாடு இருக்கட்டும்' என்ற சமரசவாதிகள் முயற்சி வெற்றி பெற்றிருக்கிறதாமே - ஜபல்பூரில்?"

"ஆமாம்; இப்போதாவது தெரிந்துகொண்டீர்களா?— 'தேசியம்' நழுவ விடப்படுவது எங்கே என்று? 'தேசம்' வேறு—'தேசியமயம்' வேறு என்றாலும், 'தேசம்' என்ற சொல், காங்கிரசுக்காரர்களின் பிடிக்கு எப்படி அகப்படாமல் போகிறது என்பதற்கு இதுவும் ஓர் உதாரணம்!"

தாக்கவும் தாங்கவும் தயாராகிறது கெய்ரோ!

மேற்கொண்டு எந்த இஸ்ரேலிய படையெடுப்புக்களையும் சமாளிப்பதற்கான நடவடிக்கைகளில், ஐக்கிய அரபுக குடியரசு தீவிரமாக ஈடுபட்டு வருகிறதாம்!

கெய்ரோ நகரைச் சுற்றிப் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன!

'இஸ்ரேலிய விமானத் தாக்குதல்களுக்குப் பலியாகாமல் பிழைத்துக் கொள்வது' எப்படி என்பது குறித்துக் கெய்ரோ மக்களுக்குச் சொல்லித் தரப்பட்டு வருகிறது!

"அண்மையில் நாசமாக்கப்பட்ட எண்ணெய் சுத்திகரிப்புக் கிடங்குகள், இஸ்ரேலியத் தாக்குதலின் ஒரு துவக்கமே! அரபுக் குடியரசு இனிப் படிப்படியாக இஸ்ரேல் படையின் முன்னேற்றத்தினைச் சந்திக்க வேண்டி வரும்"

என, இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் மோஷே தயான் அறிவித்திருப்பதனையொட்டி, கெய்ரோ இந்த நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

நம்நாடு

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ.

திருவள்ளுவராண்டு 1998 ஐப்பசி 11 (28—10—67) சனி

பக்தவத்சலத்தின் சொத்தை வாதம்!

[3]

தென் சென்னை நாடாளுமன்றத் தொகுதிக்காக நடைபெறக் கூடிய இடைத் தேர்தலில், கழகம் போட்டியிடாமல், காங்கிரசுக் கட்சிக்கு விட்டுக்கொடுக்கத் தாம் ஒருப்படுவதாக அறிஞர் அண்ணு அவர்கள் அப்பொழுது அறிவித்தார். இவ்வாறு அவர் அறிவித்ததற்குக் காரணம், 'தமிழக நலனுக்காக வாதாடவும் வழக்காடவும், விளக்கிக்கூறித் தேவையைப் பெறவும், அறிவாற்றலும் அனுபவமும் படைத்த – தகுதிவாய்ந்த ஒரு காங்கிரசுத் தலைவர், இந்திரா அமைச்சரவையில் இடம்பெற்றிட வேண்டும்' என்பதற்கே ஆகும்.

தமிழக நலன் பாதுகாக்கப்பட்டு வருவதில் தமக்கு இயல்பாக இருந்திடக்கூடிய அக்கறையும் கவலையும், கழகம் இரண்டு முறையாக வெற்றி பெற்ற – அதிலும் தம்மையே தேர்ந்தெடுத்த தென் சென்னைத் தொகுதியைக் காங்கிரசுக் கட்சிக்கு விட்டுக்கொடுக்க, அறிஞர் அண்ணு அவர்களுக்குத் தூண்டுதலாக அமைந்தன. இவ்வுயர்ந்த குறிக்கோளை மனத்திலிறுத்தி, அத்தொகுதியிலிருந்து கழகம் பெற்றிடக்கூடிய வலிவைக்கூட அவர் இழக்கத் துணிந்தார்.

தென் சென்னைத் தொகுதியில் கழகம் இரண்டு முறை தொடர்ந்து வெற்றி பெற்றிருக்கிறது—இடைத்தேர்தலில் மூன்றும் முறையாகவும் வெற்றி பெறுவது நிச்சயத்திலும் நிச்சயம் என்ற உண்மை, காங்கிரசுப் பெரியவருக்கும் தெரியும்—அண்ணு அவர்களுக்கும் தெரியும். எனவே, 'இடைத்தேர்தலில் வெற்றி பெற முடியாது என்பதற்காக, அத்தொகுதியைக் காங்கிரசுக் கட்சிக்கு விட்டுக் கொடுப்பதன் மூலம், கழகத்துக்குக் கிடைத்திடக்கூடிய அரசியல் சரிவைக் காப்பாற்றிக்கொள்ளத்தான், அவர் அவ்வாறு அறிவித்தார்' என அண்ணு மீது குற்றஞ்சுமத்துவதற்குமில்லை.

தம்மைத் தலைவராகக் கொண்ட கழகத்துக்குத் தனித்த முறையில் கிடைத்திடக்கூடிய அரசியல் இலாபத்தைவிட, தமிழக நலனுக்குக் கிடைத்திடக்கூடிய பாதுகாப்பு இன்றியமையாதது—சிறந்தது என முடிவுகட்டியே அண்ணு அவர்கள், காங்கிரசுக் கட்சிக்கு அச்சலுகையைக் காட்ட முன்வந்தார். சொந்தக் கட்சி நலனைவிட, தமிழக நலன் முக்கியமானது—முதன்மையானது எனத் தாம் கொண்டிருக்கின்ற விழுமிய கண்ணேட்டத்தின் விளைவாகவே அண்ணு அவர்கள், தூய்மையான உள்ளத்தோடு, தென் சென்னை இடைத் தேர்தலில் காங்கிரசுக் கட்சிக்கு விட்டுக் கொடுக்க முனைந்தார்.

தமிழக நலனுக்கு முதலிடம் கொடுத்து—கட்சி நலனுக்கு இரண்டாம் இடமளித்து—தென் சென்னைத் தொகுதியைக் காங்கிரசுக் கட்சிக்கு விட்டுக்கொடுக்க அண்ணு அவர்கள் தம்மிச்சையாக அறிவித்ததைப் புரிந்துகொள்ளக் காங்கிரசுப் பெரியவரால் முடியவில்லை; உடனே, தம்மியல்புப்படி, 'ஏற்பது இகழ்ச்சி' என வீராப்புப் பேசிவிட்டார்!

அண்ணு அவர்களின் அறிவிப்பிலிருக்கின்ற விளைவுகளை, நுணுகி ஆராய்ந்து அறிந்து கொள்ளக்கூடிய அரசியல் அறிவு பெற்றவராகக் காங்கிரசுப் பெரியவர் இருந்திருக்கும்பட்சத்தில், அண்ணுவின் சலுகையை ஏற்றுக்கொண்டிருப்பார். அப்படி ஏற்றுக்கொண்டிருக்கும்பட்சத்தில், இந்த இடைத் தேர்தலில் போட்டியிடக்கூடிய காங்கிரசு வேட்பாளருக்கு எதிராகக் கழகம் போட்டியிட்டிராது என்பதுடன், காங்கிரசு வேட்பாளரை வெற்றி பெறச் செய்யவேண்டிய கட்டாயமும் கழகத்துக்கு ஏற்பட்டிருக்கும்.

இப்படிக் காங்கிரசு வேட்பாளரை வெற்றி பெறச் செய்ய வேண்டும் என்ற கட்டுப்பாடு கழகத்துக்கு இல்லை என்றுலும், எந்தக் குறிக்கோளுக்காக தான் போட்டியிடாமல் காங்கிரசுக்கு விட்டுக் கொடுத்ததோ, அதே குறிக்கோளுக்காகக் காங்கிரசு வேட்பாளரை வெற்றி பெறச் செய்யவேண்டியதும் கழகத்தின் மறைமுகப் பொறுப்பாகிவிடுகிறது.

தென் சென்னைத் தொகுதியில் கழகம் போட்டியிடுவதாக இருந்தால், பொதுத் தேர்தலில் கழகத்துடன் தொகுதி உடன்பாடு செய்துகொண்ட மற்ற அரசியல் கட்சிகள், கழகத்துக்கு எதிராகப் போட்டியிடாது என்பதுடன், கழகத்தின் வெற்றிக்காகவும் முயற்சி எடுத்துக்கொள்ளும். ஆனுல், அண்ணு அறிவித்தபடி, காங்கிரசு வேட்பாளரை எதிர்த்துக் கழகம்தான் போட்டியிடாதே அல்லாது மற்ற அரசியல் கட்சிகள் போட்டியிடாது என்பதில்லை; பலமுனைப் போட்டியையும் எதிர்பார்க்கத்தான் வேண்டும்.

இப்படி ஒரு நிலை உருவெடுக்காது என்பதற்கில்லை. இத்தகு நிலை உருவெடுத்துவிடும்பட்சத்தில், 'தமிழக நலன்' என்ற தனது இலட்சியம் நிறைவுபெற, காங்கிரசு வேட்பாளருக்கு வெற்றியைத் தேடித் தரவேண்டியது – விரும்பினுலும் விரும்பாமற் போனுலும் – கழகத்தின் தலையாய பொறுப்பு ஆகிறது.

பொதுத் தேர்தலில் தொகுதி உடனபாடு செய்துகொண்டு, கூட்டாக மற்ற கட்சிகளின் வெற்றிக்காகக் கழகமும், கழகத்தின் வெற்றிக்காக மற்ற கட்சிகளும் பாடுபட்டதனுல் உருவாகியுள்ள அரசியல் உறவை ஒதுக்கி வைத்துவிட்டு, தோழமைக் கட்சிகளுக்கு எதிராகவும், பொதுத் தேர்தலில் முழுமூச்சாக எதிர்த்துப் போரிட்டு வீழ்ச்சியுறச் செய்த காங்கிரசுக் கட்சிக்கு ஆதரவாகவும் இந்த இடைத்தேர்தலில் ஈடுபட்டுத் தீரவேண்டிய நெருக்கடி கழகத்துக்கு நிச்சயம் ஏற்பட்டிருக்கும். அந்த நெருக்கடியை, காங்கிரசுப் 'பெரிய'வரால், கழகத்தின் மீது திணித்திருக்க முடியும்.

தென் சென்னை இடைத் தேர்தலைப் பொறுத்தவரையில், அண்ணுவின் அறிவிப்பை உதறித்தள்ளாமல் காங்கிரசுப் 'பெரியவர்' ஏற்றுக்கொண்டிருந்தால், தமிழக அரசியலில் எதிர்பாராத கொந்தளிப்பேகூட ஏற்பட்டிருக்கும். இந்த விளைவுகளையெல்லாம காங்கிரசுப் பெரியவரால் யூகிக்க முடியாது என்பது உண்மை. காங்கிரசுப் பெரியவரால் உணர்ந்துகொள்ள முடியாததை, முன்னுள் முதலமைச்சராவது அவருக்கு அப்பொழுதே உணர்த்தியிருக்க வேண்டும். பதவி இழந்து பரதவித்துக்கொண்டிருக்கின்ற அவருக்கு மட்டும், உண்மை உணரும் திறன் எப்படி இருந்திட முடியும்?

தமிழக நலனில் அண்ணு அவர்கள் வைத்திருக்கின்ற கவலை அளவுக்குத் தமக்குக் கிடையாது என்பதை, அண்ணு அவர்களின் அறிவிப்பை அலட்சியப்படுத்தியதிலிருந்து, காங்கிரசுப் 'பெரியவர்' வெளிப்படுத்திக்கொண்டுவிட்டார். தமிழக நலனில் கடுகளவு பற்றும் இல்லாத காங்கிரசுப் பெரியவர்தான், இந்த இடைத் தேர்தலில் காங்கிரசு வேட்பாளரை ஆதரிக்கும்படி வாக்காளரை வேண்டிக் கொண்டிருக்கின்றுர். அவருக்கு ஒத்து ஊதுவது போல் மீஞ்சூர் முதியவரும், இந்த இடைத் தேர்தலில் கழகம் போட்டியிடுவதற்கும்–இந்திரா காந்தி ஆட்சி நீடித்து இருந்துவர வேண்டும் என்ற அண்ணு அவர்களின் விருப்பத்துக்கும் இல்லாத தொடர்பை உண்டாக்கி தம் மனம்போன போக்கில் பிதற்றிவருகின்றுர்.

தென் சென்னை வாக்காளர்கள் இந்த உளறல்களை எல்லாம் ஒதுக்கித் தள்ளிவிட்டு–உதயசூரியன் சின்னத்தில் முத்திரையிட்டு –எழுத்தாளர் முரசொலி மாறன் அவர்களை வெற்றிபெறச் செய்ய வேண்டுகிறோம்.

—கா. க.

கையேந்தும் நிலைமாறி கைகொடுக்கும் நிலைபிறக்க...!

அறிஞர் அண்ணு ஆய்வுரை

உதகை, அக். 27—

"வெளிநாடுகளில் பயிற்சி பெறச் சென்ற அதிகாரிகள் தங்கள் அறிவையும், பெற்ற பயிற்சியையும் பயன் படுத்த முடியாத வேலைகளிலேயே பெரும்பாலும் நியமிக்கப்படுகிறுர்கள். அவர்கள் பயிற்சி பெறுவதன் நுண்பொருளை அரசு தெரிந்துகொள்ளாதிருப்பதே இதற்குக் காரணமாகும்.

"நம்முடைய நாட்டில் உள்ள இயற்கை வளங்களையும், மனித சத்தியையும், தொழில் நுட்ப--விஞ்ஞான அறிவையும், தக்கவிதத்தில் பயன்படுத்தினுல் நாம் விரைந்து முன்னேறமுடியும்.

"இந்தியா இதுவரையில் மற்ற நாடுகளின் உதவியைப் பெற்றுவரும் நாடாக இருந்துவந்திருக்கும் நிலை விரைவில் மாறி, மற்றவர்கட்கு உதவி வழங்கிடும் நாடாகும் நிலை ஏற்படத்தான் போகிறது"

என்று, தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணு அவர்கள் நம்பிக்கை தெரிவித்தார்.

அமெரிக்க உதவியுடன் பயிற்சி பெற்றுத் திரும்பியவர்களின் கருத்தரங்கிற்கு அறிஞர் அண்ணு அவர்கள் தலைமையேற்று உரையாற்றினுர்கள்.

இந்தியாவில் உள்ள அமெரிக்கத் தூதுவர் திரு. செஸ்டர் பவுல்ஸ், கருத்தரங்கைத் துவக்கி வைத்து உரையாற்றினுர்.

தமிழக அரசின் தலைமைச் செயலாளர் திரு. சி. ஏ. இராமகிருஷ்ணன் அனைவரையும் வரவேற்றுர்.

"இதுவரை, அமெரிக்காவில் பயிற்சி பெற்று இந்தியா திரும்பிய 4,500 பேர்களில் 200 தமிழக அரசு அதிகாரிகள் உட்பட 300 பேர் தமிழகத்தில் உள்ளனர்"

என்று, திரு. சி. ஏ. இராமகிருஷ்ணன் தெரிவித்தார்.

அமெரிக்கத் துணைத் தூதுவர் டாக்டர் பிராங்க்ளின் நன்றி கூறினுர்.

அண்ணு அவர்கள் தமது உரையில் மேலும் குறிப்பிட்டதாவது:—

அறிவைப் பயன்படுத்துக!

"இக்கருத்தரங்கில் கலந்து கொள்வோர், தாங்கள் பெற்ற அறிவை நாட்டின் முன்னேற்றத்திற்கு எந்த அளவுக்கு முடியுமோ அந்த அளவுக்குப் பயன்படுத்த வேண்டும்.

இந்தியாவுக்கும் – அமெரிக்காவுக்கும் இடையேயுள்ள தொடர்பு, வரலாற்றுச் சிறப்புமிக்கது.

கொலம்பஸ் இந்தியாவைக் கண்டுபிடிக்கப் புறப்பட்டுச் சென்றுதான் அமெரிக்காவில் இறங்கினுர். அந்த நாட்டிற்கு, 'புதிய உலகம்' என்று பெயரிடப்பட்டது.

அந்தப் புதிய உலகின் நீண்ட காலக் கனவுகள், பல நூற்றுண்டுகளின் கடின உழைப்பினுலும், சொந்த முயற்சியினுலும், நனவாகிவருகின்றன. இந்தியா போன்ற வளர்ச்சி பெற்றுவரும் நாடுகள் அதனைப் பின்பற்ற வேண்டும்.

அமெரிக்கா உள்ளிட்ட பல நாடுகளிடமிருந்து இந்தியா தாராளமாக உதவியைப் பெற்றுவந்திருக்கிறது. நம்மைச் சுற்றிலும் நட்புறவு நாடுகள் இருக்கின்றன என்பதையும், நமக்கு உதவ அவைகள் ஆயத்தமாக இருக்கின்றன என்பதையும் இதன்மூலம் உணருகிறேம்.

நமக்கே உரிய பண்பாடுகளைப் பயன்படுத்தி நம்மை [illegible]ன்னேற்றப் பாதையில் [illegible] அந்த நாடுகள் தயாரா[illegible]ன்றன.

நம்மிடையே தன்னம்பிக்கை—தன்னிறைவு பெற வேண்டியதன் இன்றியமையாமை ஆகியவை பற்றிய கருத்துக்களை அந்த நாடுகள் உணர்த்திவருகின்றன.

இந்தியாவுக்கு, அமெரிக்கா அளித்திருக்கும் தாராள உதவியைப் பாராட்டுகிறேன். அமெரிக்கத் தொழில்நுட்ப அறிவு, இந்த நாட்டின் வேளாண்மை வளர்ச்சிக்குப் பெரிதும் பயன்பட்டிருக்கிறது.

கடின உழைப்பின் மூலம் அமெரிக்கா பெற்றுள்ள முன்னேற்றத்தை இக்கருத்தரங்கில் பங்கேற்கும் பயிற்சியாளர்கள் நன்கு உணர்ந்து அதன்படி நடக்க வேண்டும்."

'தமிழகத்தைப் பின்பற்றுவோம்'

பயிற்சிமொழி பற்றிப் புதுவை அமைச்சர்

சென்னை, அக். 28—

"புதுவை மாநிலத்தில், பாடமொழி சம்பந்தமாக தமிழகத்தையே பின்பற்றுவோம்"

என்று புதுவை கல்வி அமைச்சர் மாணிக்கவாசகம் கூறியிருக்கிறுர். அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

"புதுவையில் உள்ள கல்லூரிகள் தமிழகத்தில் இருக்கும் சென்னைப் பல்கலைக் கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ளன; எனவே, புதுவைக் கல்லூரிகளில் புதிதாகக் கல்விக் கொள்கை கடைபிடிக்க வேண்டிய அவசியம் இல்லை.

"புதுவை அரசாங்க வரவு-செலவுத் திட்டத்தில் துண்டு விழும் தொகையினைச் சரிகட்ட எல்லாவித ஏற்பாடுகளும் செய்யப்படுகின்றன. கூடுதலாகத் தேவைப்படும் நிதிக்கு இதுவரை மத்திய அரசாங்கத்திடம்தான் பெற்று வருகின்றேம்.

புதுவை மாநிலத்தின் நிதி வளங்களை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளையும் மேற்கெண்டு இருக்கிறேம்.

புதுவையில் வருமானம் படிப்படியாக உயர்ந்து வருகின்றது; மது மூலம் வருமானம் இருந்தாலும் அது போதவில்லை; எனவே விற்பனை வரி விதிக்கப்படுகின்றது.

விற்பனை வரி மசோதா ஏற்கனவே நிறைவேறி விட்டது; அது, குடியரசுத் தலைவர் இசைவுக்காகக் காத்து இருக்கிறது."

வெல்ல ஏற்றுமதிக்குத் தடை

சென்னை, அக். 26—

தமிழகத்திலிருந்து வெல்லம் ஏற்றுமதியைத் தடைசெய்ய அனுமதிக்க வேண்டுமென்ற தமிழக அரசின் வேண்டுகோள் பற்றி மத்திய அரசு நவம்பர் 2-ம்நாள் முடிவு செய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இது தொடர்பாக தமிழக அரசு மத்திய அரசுடன் இடைவிடாது தொடர்புகொண்டு வருவதாக அமைச்சர் கே. ஏ. மதியழகன் கூறினுர்.

'தொழில் மந்த நிலைக்குத் திட்டமிட்டவர்களே காரணம்'

அமைச்சர் மாதவன் குற்றச்சாட்டு

சென்னை, அக். 24—

"தற்போது தொழில் துறையில் மந்த நிலை நிலவுவதற்குக் காரணம், சீரான முறையில் சிந்தித்துத் தொழிற் கொள்கையை வகுத்து நாடு முழுமைக்கும் அதை ஒருங்கிணைத்துச் செயல்படுத்தாதே"

என்று, தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. செ. மாதவன் கருத்தறிவித்தார்.

அம்பத்தூரில் நடந்த 'ஒமேகா இன்சுலேட்டர் கேபிள் கம்பெனி'யின் மூன்ருவது ஆண்டு நிறைவு விழாவிற்கு அமைச்சர் மாதவன் தலைமைவகித்து உரை நிகழ்த்தினுர்.

இந்த விழாவில் புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் எம்.எல்.ஏ. அவர்களும் கலந்து கொண்டு, நிர்வாகத்தின் சார்பில் தொழிலாளர்கட்குச் சீருடைகள் வழங்கினுர்.

அமைச்சர் மாதவன் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"தொழிலாளர் பிரச்சினையில் சுமூகமான தீர்வு காண வேண்டும் என்ற கொள்கையை தொழிலாளர்—நிர்வாகத்தினர் ஆகிய இருதரப்பாரும் ஏற்றுக் கொண்டு செயல்பட முன்வந்தால் அரசாங்கம் அவர்கட்கு ஆதரவாக உதவிகளைச் செய்ய முன்வரும்.

ஏற்காட்டில் அமைச்சர் முத்துசாமி

பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்பு

சேலம், அக். 13—

தமிழக உள்ளாட்சித் துறை அமைச்சர் மாண்புமிகு மா. முத்துசாமி அவர்கள் ஏற்காட்டிற்கு வருகைதந்தார்.

ஏற்காடு பெண்கள் கான்வெண்டில் மாணவிகள் வரவேற்புடன் ரெவரண்ட் பெர்னுடு அம்மையார் வரவேற்ருர்.

அங்கு கலெக்டரின் நேர்முக உதவியாளர் மீனுட்சி சுந்திரமும், மாவட்ட ரெவின்யூ அதிகாரி மித்து ரஞ்சனும் சிறு சேமிப்புப் பற்றிப் பேசினர்.

அமைச்சர், சிறுசேமிப்பு சர்டிபிகேட்டுக்களை மாணவிகளுக்கு வழங்கி, தமக்கு அளிக்கப்பட்ட வரவேற்புக்கு நன்றிகூறினுர்.

சிறு சேமிப்பின் அவசியம் பற்றி நல்லுரை வழங்கினுர்,

பிறகு ஏற்காட்டிலிருந்து 7-வது மைலில் உள்ள வாளவந்தி கிராமத்தில் திரு. க. இராசாராம் பி.ஏ., எம்.பி. தலைமையில் அமைச்சர் அவர்கள், மருத்துவ நிலையத்திற்கு அடிக்கல் நாட்டினுர்.

பொறியர் சிவப்பிரகாசம் அறிக்கை வாசித்தார்; ஏற்காடு நகரியத் துணைத்தலைவர் இராஜேஸ்வரன்வரவேற்றுப்பேசினுர்.மாவட்டச்செயலாளர் ஈ.ஆர்.கிருஷ்ணன் எம்.எல்.ஏ., கிராம மக்களுக்கு வானெலிப் பெட்டி வழங்கினுர்; தொகுதிச் சட்டமன்ற உறுப்பினர் சின்னசாமி நன்றிகூறினுர்.

அடுத்து நாகலூரில் மாணவர்கள் தங்கும் விடுதிக்கு அடிக்கல் நாட்டு விழா திரு. சின்னசாமி எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது. அமைச்சர் அந்த இல்லத்திற்கு அடிக்கல் நாட்டினுர். ஊராட்சி, ஆணையாளர் நன்றி கூறினுர்.

அடுத்து நாகலூர் — டேனிஸ் பேட்டை புதிய பாதை திறப்பு விழாவிற்கு மாவட்டச் செயலாளர் ஈ. ஆர். கிருஷ்ணன் எம்.எல்.ஏ., தலைமை வகித்தார்; கலெக்டர் நேர்முக உதவியாளர் வரவேற்றுப் பேசினுர்; நாடாளுமன்ற உறுப்பினர் க. இராசாராம், சட்டமன்ற உறுப்பினர்கள் பழனி, எஸ். ஆறுமுகம், பொன்னுசாமி, சின்னுசாமி, மற்றும் இராஜேஸ்வரன் ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

விழாவிற்கு வருகை தந்தவர்களை வரவேற்று தோட்ட அதிபர்கள் ஏ. விமலன், ஏ. ஜெயதிலகன் ஆகியோர் மாலை அணிவித்தனர்; விமலன் சகோதரர்களின் சார்பில் திரு. சகநாதன், கைத்தறி ஆடைகள் அணிவித்தார்.

தலைமைவகித்த ஈ. ஆர். கிருஷ்ணன் பேசும்பொழுது விமலன் சகோதரர்கள், இங்கு போடப்படும் புதிய பாதைக்கு நன்கொடையாக நிலம் கொடுத்ததைப் பாராட்டியும் பாதை போடும் பொறுப்புள்ள அதிகாரிகள் தாங்கள் செய்யும் பணியை செம்மையாகவும், நஷ்டம் ஏற்படாமலும் நல்லமுறையில் ஒத்துழைப்புத் தர வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.

அமைச்சரிடம் பாதை போடும் காண்டிராக்டர்கள் மலர் மாலை அணிவித்து, தங்களுக்கு வேலை செய்த பணம் வந்துசேரவில்லை என்று மனு அளித்தனர்;அதுபற்றி விசாரித்து ஆவன செய்வதாக அமைச்சர் கூறினுர்.

பின் மாவட்ட அவைத் தலைவர் ஜி. பி. சோமசுந்தரம் எம்.பி. அவர்கள் தலைமையில், வெளிநாடு சென்று திரும்பிய திரு. க. இராசாராம் எம்.பி. அவர்களுக்குப் பாராட்டு விழா நடைபெற்றது; திரு. ஏ. விமலன் வரவேற்ருர்.

திரு. க. இராசாராம், தமக்கு அளிக்கப்பட்ட வரவேற்புக்கு நன்றி கூறினுர்.

மாலை 5-மணிக்கு அமைச்சருக்குத் தேநீர் விருந்தளிக்கப்பட்டது.

மாலை 6-மணிக்கு திரு. இரா. சகநாதன் தலைமையில் ஏற்காடு தி.மு.க. கிளையின் சார்பில் அசெம்பிளி ஹாலில் பொதுக் கூட்டம நடைபெற்றது; வட்டச் செயலாளர் பண்டரிநாதன், எஸ். ஏ. அன்புகரசு, பொன்னுமலை எம்.எல்.ஏ., பழனி எம்.எல்.ஏ., சின்னசாமி எம்.எல்.ஏ., மாவட்டச் செயலாளர் ஈ. ஆர். கிருஷ்ணன் எம்.எல்.ஏ., அமைச்சர் முத்துசாமி, க. இராசாராம் எம்.பி.,ஆகியோர் பேசினர்.

எல்லா நிகழ்ச்சிகளிலும் மாவட்டச் செயலாளர் ஈ. ஆர். கிருஷ்ணன், க. இராசாராம், சின்னசாமி இரா. சகநாதன், எஸ். ஏ. அன்புகரசு, ஏ. மாரியப்பன், எஸ். மெய்யப்பன் ஆகியோர் உடனிருந்து ஆவன செய்தனர்.

அறவழியன்று!

" அரசியல் நோக்குடன் உண்ணு நோன்புகளைக் கைக்கொள்வது அறவழியல்ல; உணர்ச்சிகளைக் கிளப்பிவிடுவதுடன், இது வன்முறைகளுக்கும் வழிகோலும்; இவற்றை நாம் அனுமதிக்கக் கூடாது "

என்று பெங்களூரில் பேசிய முன்னுள் இந்தியத் தலைமை நீதிபதி கஜேந்திர கட்கார் கருத்தறிவித்திருக்கிருர்.

★ மகாத்மாவின் மனத்திற்குகந்த திட்டம் கதர்!
★ வாழவகையில்லாத மக்களுக்கு வாழ்வளிப்பது கதர்!
★ நாட்டு மக்களின் வாழ்வு நலமுற கதரையே வாங்குங்கள்!
★ ஏழைகளின் வாழ்வு ஏற்றமுற கதரையே வாங்குங்கள்!

தமிழக அரசு கதர் -- கிராமத் தொழில் ஆயம்

உள்ளாட்சித்துறை அமைச்சரும், தமிழகக் கதர்—கிராமத் தொழில் ஆயத்தின் தலைவருமான திரு. மா. முத்துசாமி பி.ஏ.பி.டி. அவர்கள், கிழ்க்கண்டவாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்கள் :—

"காந்தி அண்ணலவர்களின் விருப்பத்தின் விளைவாகத் தோன்றிய இக்'கதர்-கிராமத் தொழில் ஆயத்தில், இன்று தமிழகத்தில் இலட்சக்கணக்கான தொழிலாளர்களும், தாய்மார்களும் ஈடுபட்டுப் பாடுபட்டு வருகின்றனர். அவர்தம் வாழ்வு வளமுற—அண்ணலின் எண்ணம் நிறைவுற—அனைவரும் இத்தொழிலுக்கு ஆக்கமும் ஊக்கமும் தருவது அவசியமாகிறது."

(ஒ-ம்) மா. முத்துசாமி

தமிழகக் கதர்—கிராமத் தொழில் ஆயத்தின் துணைத் தலைவர் திரு. பி. என். பரமசிவம் எம்.எல்.ஏ. அவர்களுடைய வேண்டுகோள் :—

"தமிழகமெங்கும் கதர் விற்பனை நிலையங்கள் இயங்கிவருகின்றன. அக்டோபர் மாதத்தில் மேலும் பல இடங்களில், பொதுமக்கள் வசதியை முன்னிட்டு தற்காலிகமாகக் கதர் விற்பனை நிலையங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இந்த ஆண்டிலும், 2—10—1967 முதல் 1—11—1967 வரை பருத்தி ரகங்கள்மீது 20 சதவிகிதமும், பட்டு ரகங்கள்மீது 10 சதவிகிதமும் விலையில் விசேடத் தள்ளுபடி அளிக்கப்பட்டிருக்கிறது.

"ஆசிரியப் பெருமக்களும், அரசு மற்றும் எல்லாத் துறைகளில் பணியாற்றும் ஊழியர்களும், மாணவ மாணவியரும், மற்றும் பொதுமக்களும், பெரும் அளவிற்குக் கதர் வாங்கி, கதர்த் திட்டத்தில் ஈடுபட்டுள்ள இலட்சக்கணக்கான நூற்போர்கள்—நெசவாளர்கள்—மற்றும் இத்துறையில் ஈடுபட்டுள்ளோருக்கு நல்வாழ்வு தருவதோடு, நாட்டின் பொருளாதாரத்தைச் சிரமைக்க முன்வரும்படி கேட்டுக் கொள்கிறேன். தமிழகத்தில் ஒவ்வொரு இல்லத்திலும் கதர் வாங்கி ஆதரவு கொடுக்க வேண்டும் என மீண்டும் கேட்டுக்கொள்கிறேன்."

தங்களன்புள்ள,

(ஒ-ம்) பி. என். பரமசிவம்

கோட்டைக்குள் நுழைந்ததும்.....

பொறுப்பினை உணர்ந்து கவலையுற்றேம்---

பட்டினியால் பரதவிக்கும் மக்களை எண்ணினேம்!

இந்த ஆட்சியை ஒழிக்கவே காமராசர் முயலுகிருர் -- இயலுமா?

'பொறுப்பு உள்ளவர்கள் பொறுப்பற்றுப் பேசுவதா?--- மக்களை மதிக்கும் மனப்பக்குவம் வேண்டாமா?'--- சட்ட அமைச்சர் செ. மாதவன் தெளிவுரை

சென்னை, அக். 27—

"முதன் முதலில் கோட்டைக்குள்ளே நாங்கள் பதவியேற்று அமர்ந்த நேரத்தில், எங்களிடத்தில் அண்ணு அவர்கள், 'இந்த நாட்டிலே ஒரு வேளை உணவுக்கும் வழியில்லாது எத்தனையோ இலட்சம் பேர் பட்டினியினுல் இறக்கின்ருர்கள்; இவர்களையெல்லாம் எண்ணிப்பார்த்து நாம் பணியாற்ற வேண்டும்' என்ருர்.

"கோட்டைக்கு வந்தவுடன் கொடியவர்கள் ஆட்சியை ஒழித்த மகிழ்ச்சி அவரிடம் இல்லை! பொறுப்பை உணர்ந்து கவலைப்பட்டார்! இப்படிப்பட்ட அண்ணு அவர்களின் ஆட்சியைத்தான் ஒழிக்கப்போகிருராம் காமராசர்!

"ஏழைக்காகப் பாடுபடுவதாகக் கூறிக்கொள்ளும் காமராசர், 'பாட்டாளிகளைப் போலீசார் அடக்க வேண்டும்' என்கிருர்! எப்படி இருக்கிறது பார்த்தீர்களா—காமராசரின் சனநாயகத் திட்டம்!

"ஏழை பாட்டாளிகளுக்கு நன்மை செய்யாவிட்டால், ஆட்சியில் எங்களுக்கு என்ன வேலை இருக்கிறது? பாட்டாளிகளும், உழைப்பாளிகளும், விவசாயிகளும் நல்வாழ்வு பெற—முற்போக்குக் கட்சிகள் அனைத்தையும் ஒன்று சேர்த்து நாம் நல்லாட்சியை நடத்தி செல்கின்ருேம்!

"அண்ணுவின் ஆட்சி, ஏழை பாட்டாளி விவசாயிகளின் ஆட்சி! இந்த நல்லாட்சி — தமிழாட்சி சிறப்புற -- எடுத்துக்காட்டும் வகையில், தென் சென்னை நாடாளுமன்ற இடைத் தேர்தலில் உங்கள் முடிவு இருக்க வேண்டும்! முரசொலி மாறனை தேர்ந்தெடுப்பீர் உங்கள் சின்னம் உதயசூரியன்!"

என்று, சட்டத்துறை அமைச்சர் திரு. செ. மாதவன்: சென்னை 98-வது வட்டத்தில் நடந்த தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

தோழர் வேணு தலைமையில் நடந்த இந்தக் கூட்டத்தில் தோழர்கள் பவளவண்ணன் எம்.சி, ஆர். டி. பாஸ்கரன் எம்.சி., வை. பாலசுந்தரம், சுந்தரம், பொன்னுசாமி, கிட்டப்பா, இளவரசு, பொ. அரசு ஆகியோரும் பேசினர்.

அமைச்சர் மாதவன் தொடர்ந்து பேசியதாவது :—

"உங்களை நம்பி இருப்பவர்கள் நாங்கள்! எங்களை நம்பி அனுப்பிய உங்களை நாங்கள் மறந்தால் எங்களை நீங்கள் மறந்துவிட நாள் ஆகாது! எவ்வளவோ நாள் கொடுங்கோல் ஆட்சியுடன் போராடிப் புதிய ஆட்சியை அமைத்து எங்களை அமரவைத்த உங்களை என்றும் மறவோம்! எனவேதான், தொடர்ந்து எங்கள் பணி சிறந்திட உங்கள் ஆதரவை நாடுகிறேும்.

நாங்கள் எதிர்க் கட்சியாக இருந்த காலத்தில், காமராசர் ஆட்சியில்—பக்தவத்சலம் ஆட்சியில் கேட்டதை, இன்று செயலாற்றி வருகிறேும்! தேர்தல் காலத்தில் கூறிய உறுதிமொழிகளைப் படிப்படியாக நிறைவேற்றி வருகிறேும்! இதனுல் மக்களிடத்தில், கழக ஆட்சி மீது—அறிஞர் அண்ணுவின் ஆட்சிமீது அழுத்தமான பற்றும் உறவும் ஏற்பட்டு வருகிறது!

இதனைப் பார்த்த காமராசர் ஆத்திரமடைகிருர்; 'இவர்கள் ஆட்சியை விடுவேனு?' என்கிருர்! 'கவிழ்க்கிறேன்—கவிழ்க்கிறேன்' என்று முழங்குகிருர்! இவர் கவிழ்க்க—கவிழ்ந்துவிட, கழக அரசு அண்டாவா? இல்லை—குண்டானு?

இருபது ஆண்டுக்காலம் நடத்திய ஆட்சியின் கொடுமையை அனுபவித்த மக்கள், வீட்டிற்கு அவர்களை அனுப்பிவிட்டால், நாங்களா அதற்கு பொறுப்பு?

தி. மு. கழகம் இருபது ஆண்டுக் காலக் காங்கிரசு ஆட்சியில் எத்தனைக் கொடுமைகளை ஏற்றிருக்கிறது? எத்தனைப் பேர் கொலை செய்யப்பட்டார்கள்? எத்தனைப்பேர் துப்பாக்கிக் குண்டிற்குப் பலியானுர்கள்? இதையெல்லாம் பார்த்த பின்புதானே மக்கள் இந்த முடிவு எடுத்தார்கள்?

சென்ற தேர்தலில், 'படுத்துக் கொண்டே ஜெயிப்பேன்' என்ற காமராசர்தான், இப்போது, 'ஒழிப்பேன்—ஒழிப்பேன், என்று கூவித்திரிகிருர்!

'அது மட்டுமா சொன்னுர்?—'தி.மு. கழகத்திற்கு ஆளத் தெரியுமா? ஆளுகின்ற மூஞ்சியா இவர்களுக்கு இருக்கிறது?' என்றெல்லாம் பேசினுர்!

எனவேதான், விருதுநகர் மக்கள், 'ஆளத் தெரிந்தவர்கள் யார்' என்று அறிந்து—ஆளுகின்ற மூஞ்சியைப் பார்த்துத் தங்கள் தீர்ப்பை வழங்கிவிட்டார்கள்!

எங்கள் ஆட்சியில், ஏழைகளுக்கு—பாட்டாளிகளுக்கு—தொழிலாளிகளுக்கு ஏற்படும் இன்னல்களை—குறைகளை உண்மையான முறையில் எடுத்துக் கூறுங்கள்! அது சனநாயகம்! யாரும் ஏற்றுக் கொள்வார்கள்! அதை விட்டுவிட்டு பொறுப்பான மனிதர் இப்படிப் பொறுப்பற்றுப் பேசித் திரியலாமா?

இப்போது காமராசர், மற்றெரு புதிய கூச்சல் ஒன்றைப் போட்டுவருகிருர்; அதாவது, போராட்டம் நடத்தப்போகிருராம்! எதற்கு? ஏழைகள் வாழ்வுக்கா? அப்படியானுல், நாமும் வரவேற்போமே! ஆனுல் அவர், விலைவாசியை உயர்த்தப் போராடப் போகிருராம்!

விலைவாசியைக் குறைக்கத்தான் போராட்டம் நடக்கும்—நாம்கூட நடத்தினேம்—சிறை சென்றேம்! ஆனுல் காமராசர், 'விலை உயர வேண்டும்' என்று போராட்டம் நடத்தப் போகிருராம்'

அண்ணு அவர்கள், 'விலைகள் குறைய வேண்டும்' என்று போராடுகிருர்! காமராசரோ, 'விலைகள் உயரவேண்டும்' என்று போராடப் போகிருராம்! இப்படிப் பேசிவிட்டு, ஓட்டுக் கேட்கவும் வருகிருர் உங்களிடம்!

விவசாயத்தைப் பற்றியும், விவசாயிகள் பற்றியும் காமராசர் பேசலாமா? விவசாயிகளுக்கும் இவருக்கும் எவ்வளவு உறவு என்பது எனக்குத் தெரியாதா?

'ஏழைக்காகப் போராடுவேன்' என்று கூறும் காமராசர் பக்கத்தில் யார் இருக்கிருர்கள்? புதுக்கோட்டை மன்னரும், கந்தர்வக்கோட்டை ஜமீன்தாருமல்லவா அமர்ந்திருக்கிருர்கள்?

'சங்கீதம் கேட்கப் போகிறேன்' என்று கூறிய பக்தவத்சலம் சொல்கிருர்—'மக்கள், போதையில் ஓட்டுப் போட்டு விட்டார்கள்' என்று! பொறுப்பான பதவியில் இருந்த ஒரு பெரிய மனிதர் பேசும் பேச்சா இது? மக்களை மதிக்கும் மனேபாவம் வேண்டாமா?

நாங்கள் ஆட்சிக்கு வந்தவுடன் விலைவாசிகள் படிப்படியாக இறங்கலாயிற்று! சில பொருள்களின் விலை குறையவில்லை! அதற்கான காரணம், மத்திய அரசு!

சில பொருள்களின் விலைகளை குறைக்கும்படியான அதிகாரம் டில்லியிடம் இருக்கிறது; எனவேதான், சில பொருள்களின் விலை குறையவில்லை!

விலைகளைக் குறைக்க ரூ. 20 கோடி வேண்டும்—டில்லியைக்

(4-ம் பக்கம் பார்க்க)

கேரள மாணவர்கள் அனைவரும் விடுதலை

தண்டனையை ரத்து செய்து அரசு ஆணை

திருவனந்தபுரம், அக். 27— அண்மையில் நடைபெற்ற மாணவர் கிளர்ச்சியையொட்டிக் கைதுசெய்யப்பட்டு தண்டனை பெற்றவர்கள் அனைவரையும் விடுதலை செய்யக் கேரள அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

பொறியர்கள், மாணவர்கள் கிளர்ச்சி தொடர்பான வழக்குகள் அனைத்தையும் சம்பந்தப்பட்ட நீதிமன்றங்களின் அனுமதியுடன் திரும்பப் பெறுவதாக அரசு அறிவித்துள்ளது; ஆனால், கிள்ளி—கோலூர்–கொத்தமங்கலம் ஆகிய இடங்களில் நடந்த தீவைப்புத் தொடர்பான வழக்குகள் திரும்பப் பெறமாட்டா!

வங்காளத்துக்கு மத்திய ரிசர்வ் போலீசு!

அஜாய் முகர்ஜியின் முன்னெச்சரிக்கை

நவம்பர் மத்தியில் துவங்க இருக்கின்ற அறுவடையின்போது, வன்முறை நிகழ்ச்சிகள் எதையும் சமாளிப்பதற்காக வங்க முதலமைச்சர் அஜாய் முகர்ஜி முன்னெச்சரிக்கையாக மூன்று அல்லது நான்கு மத்திய 'ரிசர்வ் பெட்டாலியன்'களைத் தந்துதவுமாறு மத்திய அரசினைக் கேட்டுக் கொண்டிருக்கிறார்!

முரசொலி மாறனை
ஆதரித்துக்
கம்யூனிஸ்டுப் பொதுக்கூட்டம்

கேரள அமைச்சர் பேசுகிறார்

தென் சென்னைத் தொகுதி நாடாளுமன்றத் தேர்தலில் தி. மு. க. வேட்பாளர் முரசொலி மாறன் அவர்களை ஆதரித்து இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியின் சென்னை மாவட்டக் குழுச் சார்பில், சைதை தேரடித் திடலில், 30—10—67 மாலை 6-30 மணிக்கு ஒரு பொதுக் கூட்டம் நடைபெறும்;

கேரள மாநில வேளாண்மைத் துறை அமைச்சர் திரு. எம். என். கோவிந்த நாயர், தமிழகவேளாண்மைத்துறை யமைச்சர் திரு. ஏ. கோவிந்தசாமி, மற்றும் தோழர்கள் ஏ. எஸ். கே. ஐயங்கார், தா. பாண்டியன், கறந்தை மு. நாராயணன் ஆகியோர் பேசுவர்.

மாநில வீட்டு வசதிக் கழகம்

(திட்டமிடுதல் மற்றும் மேம்பாட்டுப் பிரிவு)

Ref. No. 43649/Dev. II/67

ஒப்பந்த அறிவிப்பு

கீழே காணும் வேலைகளுக்கு, வேலையின் பெயரும் ஒப்பந்ததாரரின் பெயரும் உறையின் மேலே குறிப்பிட்டு, முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள், 15—11—1967 மாலை 3 மணிக்கு முன்னதாக, கீழே கையொப்பமிட்டுள்ளவரிடம் வந்து சேருமாறு வரவேற்கப்படுகின்றன.

ஒப்பந்தப் புள்ளிகள் அதேநாள் மாலை 4 மணிக்கு நேரில் இருக்க விரும்பும் ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் உடைத்துப் பார்க்கப்படும்.

வேலையின் பெயர் :

மேற்குச் சென்னை புறநகர்த் திட்டப் பகுதி II-ல் 80 அடிச் சாலைக்குத் தெற்கிலும், மூன்றுவது 50 அடிச் சாலைக்கு மேற்கிலும், நான்காவது 50 அடிச் சாலைக்குக் கிழக்கிலும் உள்ள பிளாட்டுகளில் மண் வேலை.

வேலையின் குத்து மதிப்பீடு	ரூ. 1,07,760
செலுத்த வேண்டிய பொறுப்புத் தொகை	ரூ. 1,620
ஒப்பந்த முறை	L. S.
ஒப்பந்த நமூனுக்கள் விலை	ரூ. 10-ம் விற்பனை வரியும் (திரும்பப்பெற முடியாதது)

ஒப்பந்த விதிகள் முதலியவைகளை மாநில வீட்டு வசதிக் கழகத் தலைவர் அலுவலகத்தில் 30—10—1967 அன்றோ அதற்குப் பிறகோ அலுவல் நாட்களில் காலை 11 மணி முதல் பிற்பகல் 2 மணிக்குள் பணம் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

தலைவர்,
மாநில வீட்டு வசதிக் கழகம்

36, மவுண்ட் ரோடு
சென்னை-35
தேதி : 22—10—1967

நடக்க இருப்பவை - பொதுக்கூட்டங்கள்

29--10--67

சென்னை 76-வது வட்டம்

அண்ணா அறிவு வளர்ச்சி மன்றச் சார்பில் இரவு 8 மணிக்கு நமச்சிவாய முதலி தெருவில்; தலைவர் : முகமது சாயித்; பேசுவோர் : சி. சிட்டிபாபு எம்.பி., ஈரோடு சின்னச்சாமி, கே. எஸ். மணி எம்.சி., நெல்லை கபிலன், டி. கே. கணேசன். (சதாசிவம்–மோகனு குழுவினரின் கலை நிகழ்ச்சி நடைபெறும்.)

சென்னை 98-வது வட்டம்

மதியழகன் மன்றத் திறப்பு விழா ; மாலை 6 மணிக்கு கண்ணம்மா பேட்டையில் ; தலைவர் : மா. சாமிநாதன் ; பேசுவோர் : எஸ். எஸ். இராசேந்திரன், ம. பொ. சிவஞானம் எம்.எல்.ஏ., முரசொலி மாறன் எம்.ஏ., சைதை சம்பந்தம் எம்.சி., பவளவண்ணன் எம்.சி., ஆர். டி. பாஸ்கரன் எம்.சி., வை. பாலசுந்தரம், கு. சுந்தரம்.

சென்னை 73-வது வட்டம்

தி. மு. க. சார்பில் இரவு 8-மணிக்கு சேப்பாக்கம் பெரிய தெருவில் ; தலைவர் : அ. வீ. அகிலன் ; பேசுவோர் : என். வி. நடராசன் எம்.எல்.சி., கி. மனோகரன் எம்.ஏ.,எம்.பி., இரா. அரங்கண்ணல் எம்.எல்.ஏ., பெ. சீனிவாசன் எம்.எல்.ஏ., கோ. பிச்சை.

சென்னை 74-வது வட்டம்

மூவேந்தர் மன்றச் சார்பில் மாலை 6-30 மணிக்கு வெங்கடரங்கம் பிள்ளை தெருவில்; தலைவர் : பொ. முனுசாமி ; பேசுவோர் : ம. பொ. சிவஞானம் எம்.எல்.ஏ., முரசொலி மாறன் எம்.ஏ., எஸ். கே. பாலசுப்பிரமணியம் பி.ஏ.பி.எல்., வேலூர் கிருஷ்ணமூர்த்தி, பட்சிராச கோபாலன் பி.எஸ்சி.,பி.எல்., பி. ஆர். நாகராசன் எம்.சி., வண்ணை வரதராசன், மு. பொ. பகவத் சிங், பொ. நடராசன்.

30--10--67

சென்னை 53-வது வட்டம்

கோ. சு. மணி நினைவு மன்றச் சார்பில் மாலை 6-30 மணிக்கு : தலைவர் : எம். ஏ. பழனி எம்.சி.; பேசுவோர் : ஏ. வி. பி. ஆசைத்தம்பி எம்.எல்.ஏ., மதுரை எஸ். முத்து எம்.எல்.சி., மைனர் மோசஸ் பி.ஏ.பி.எல்., ஏ. எம். இராசா எம்.ஏ.,எம்.எல்.ஏ., என். வி. என். சோமு பி.ஏ., கா. முருகேசன். (வெ. அரங்கநாதன் தலைமையிலும் இரா. நடராசன் முன்னிலையிலும் சிவகங்கை சேதுராசனின் பல குரல் கலை நிகழ்ச்சி நடைபெறும்.)

சென்னை 73-வது வட்டம்

தி. மு. க. சார்பில் இரவு 8-மணிக்கு சேப்பாக்கம் பார்த்தசாரதி நாயுடு தெருவில்; தலைவர் : கோ. பிச்சை ; பேசுவோர் : அமைச்சர்கள் இரா. நெடுஞ்செழியன், செ. மாதவன், மற்றும் என். வி. நடராசன் எம்.எல்.சி., ம. பொ. சிவஞானம் எம்.எல்.ஏ., அ. வீ. அகிலன்.

சென்னை 81-வது வட்டம்

பண்பன்பு வளர்ச்சி மன்றச் சார்பில் இரவு 7 மணிக்கு வன்னிய தேனும்பேட்டை போய்ஸ் சாலையில் ; தலைவர் : அ. டேனியல் ; பேசுவோர் : இலட்சிய நடிகர் எஸ். எஸ். இராசேந்திரன், மதுரை முத்து எம்.எல்.சி., முரசொலி மாறன் எம்.ஏ., இரா. அகமழகன், ஏ. சுப்புக்கண்ணு, கே. இராமன், மா. மோகன், சங்கரன், பு. இலக்குவன்.

கோபி

தி.மு.க. சார்பில் பெரியார் திடலில் ; பேசுவோர் : க. அன்பரசு, மற்றும் பலர்.

ச. கணபதிபாளையம்

தி.மு.க. சார்பில் இரவு 8 மணிக்கு மாரியம்மன் கோயில் திடலில் ; தலைவர் : ஜி. கே. வீரப்பன் ; பேசுவோர் : க. அன்பரசு, கே. எஸ். ஆனந்தன் பி.காம்., பி.எல்., ஜி. பி. வெங்கிடு எம்.சி., பு. க. பழனியப்பன்.

சென்னை 96-வது வட்டம்

கலைஞர் பொதுப்பணி மன்றத் துவக்க விழா ; இரவு 7 மணிக்கு அசோகா நகர்புதூரில் ; தலைவர் : வி. பி. வீரப்பன் ; மன்றத் திறப்பாளர் : அமைச்சர் கே. ஏ. மதியழகன். (சிவகங்கை சேதுராசனின் பலகுரல் கலை நிகழ்ச்சி நடைபெறும்.)

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி, அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, [illegible] செங்குத் தெரு, சென்னை-1) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

தென்னக அணிகலத் தொழிலாளர்களின் தேர்தல் பணி

"தென் சென்னை நாடாளுமன்ற இடைத் தேர்தலில், தி. மு. கழக வேட்பாளர் முரசொலி மாறனை ஆதரித்து 29—10—67 காலை 9 மணியளவில் இராஜாஜி மண்டபத்திலிருந்து தென்னக அணிகலத் தொழிலாளர் சங்கக் காப்பாளர் திரு. என். வி. நடராசன் எம்.எல்.சி. அவர்களால் துவக்கிவைக்கப்படவிருக்கும் நகைத் தொழிலாளர் பிரச்சாரக் குழு—தாம்பரம் கே. எம். நரசிம்மன் தலைமையில் — ஆ. செ. சேசாசலம், கே. முனுசாமி, கே. கே. குப்புசாமி, மா. கொ. சொக்கலிங்கம், வேதகிரி, கோ. வே. சிவனேசன, வி. எம். தட்சணாமூர்த்தி, சண்முகம், பி. என். முருகேசன், டி. என். துரை, எஸ் பாபு, வி. பி. எம். அருணசல ஆச்சாரி, கோவை திராவிடமணி, பி. எஸ். பாபு, எம். விநயகம், எஸ். இராஜிலிங்கம், என். ஏ. வேலுமணி, ஆர். தேசிகன், மாசி ஆச்சாரி, டி. இராமதாசு, நீலன், வேந்தன், அங்கமுத்து, வடிவேலு, லோகன், ஜெகனுதன், ஆகியோர்—விளம்பரத் தட்டிகளுடன் வீடு வீடாகச் சென்று வாக்களிக்குமாறு பொதுமக்களை கேட்டுக்கொள்ளுவார்கள்"

என்று தென்னக அணிகலத் தொழிலாளர் சங்கச் சார்பில் அறிவிக்கப்படுகிறது.

புதுவை வட்டத் தோழர்கட்கு :

புதுவை வட்ட தி. மு. க. செயலாளா எம். ஏ. சண்முகம் தமது உடல்நிலை காரணமாக ஒரு மாத காலம் ஓய்வு எடுத்துக்கொள்ள வேண்டியிருப்பதால், பொதுக் கூட்டம் எதிலும் கலந்துகொள்ள இயலாத நிலையில் இருப்பதாகக் கழகத் தோழர்கட்குத் தெரிவித்துக் கொள்கிறார்.

தொலைபேசி வசதி

வட்டக் கழகத்துடனும், வட்டச் செயலாளருடனும் தொடர்பு கொள்ளத் தொலைபேசி வசதி செய்யப்பட்டுள்ளது. தொலைபேசி எண் : 717.

மாநகராட்சி நிகழ்ச்சி

சென்னை 100-வது வட்டம் சைதாப்பேட்டை ஈக்காட்டுத் தாங்கலிலுள்ள மாநகராட்சித் துவக்கப் பள்ளிக் கட்டிடத்தை முரசொலி மாறன் எம்.ஏ. திறந்து வைப்பார்; இவ்விழா 31—10—67 இரவு 8-மணிக்கு, மேயர் இரா. சம்பந்தம் முன்னிலையிலும் — நடிப்பிசைப் புலவர் கே. ஆர். இராமசாமி அவர்கள் முன்னிலையிலும் நடைபெறும் ; வரவேற்பு : சைதை சம்பந்தம் எம் சி., ஆர். டி. பாஸ்கரன் எம்.சி.

தென் சென்னை

தேர்தல் அலுவலகத் திறப்புவிழா

சென்னை 92-வது வட்டம் கருணாநிதி மன்றச் சார்பில் 29—10—67 காலை 8-மணிக்கு கோடம்பாக்கம் காமராசர் காலனியில் தேர்தல் அலுவலகத் திறப்புவிழா நடைபெறும் ; ஏ. எஸ். இராமன் எம்.சி. தலைமையில் வி. முனுசாமி எம்.சி. கொடியேற்றி வைப்பார்; மேயர் இரா. சம்பந்தம் அறிஞர் அண்ணா படத்தைத் திறந்துவைப்பார்; மைனர் மோசஸ் எம்.சி. அமைச்சர் கருணாநிதி படத்தைத் திறந்து வைப்பார். சா. கணேசன் எம்.சி. வெற்றியைக் குறிக்கும் வகையில் இரு வெண்புருக்களைப் பறக்கவிடுவார் ; காஞ்சி மணிமொழியார் இனிப்பு வழங்குவார் ; மா. செங்குட்டுவன் வரவேற்பார்.

அமைச்சர் மா. முத்துசாமி, மற்றும் எம். கோபால் எம் எல்.ஏ., எம். குமார், சோ. கி. மூர்த்தி, செ. கண்ணப்பன், க. துரை, புலியூர் இராதா, நீலநாராயணன், சு. பாலன் எம்.சி., ஏ. ஏ. கபாலமூர்த்தி எம்.சி., பவளவண்ணன் எம்.சி., சைதை சம்பந்தம் எம்.சி., எஸ். கன்னியப்பன் எம்.சி. ஆகியோர் உரையாற்றுவர்.

மணிவண்ணன்—பத்மினி குழுவினரின் 'புயலுக்குப் பின்' என்னும் கலைநிகழ்ச்சி நடைபெறும்.

மே. வீ வேணுகோபாலர் பிறந்த நாள் [illegible]விழா

அறிஞர் அ[illegible]ணா

கலந்துகொள்கிறார்

சிந்தாமணிச் செல்வர் மகாவித்துவான் மே. வீ. வேணுகோபால் (பிள்ளை) அவர்களின் 72-வது பிறந்த நாள் விழாவும், அவரது 'தமிழ் அன்றும்—இன்றும்' என்ற நூல் வெளியீட்டு விழாவும், தமிழ் இயல்மன்றச் சார்பில் 29—10—67 மாலை 7-மணிக்கு மவுண்ட் ரோடு பாலர் அரங்கில் நடைபெறும்.

திரு. சோமசுந்தரத் தம்பிரான் தலைமைவகித்து பட்டாடை அணிவிப்பார்.

முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் பட்டமளித்துச் சிறப்புரையாற்றுவார்கள்.

திரு. எம். ஆர். பெருமாள் முதலியார் எம்.ஏ., எல்.டி. நூலை வெளியிட்டு உரையாற்றுவார்.

திரு.ந சஞ்சீவி எம்.ஏ.,எம்.லிட்., திருமதி இராசேசுவரி நடராசன் பி.ஏ., திரு. ந. ஆறுமுகம் எம்.ஏ., ஆகியோர் பாராட்டுரை வழங்குவர்.

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

கேட்டோம் ; 'எப்படிக் கேட்கலாம்' என்கிறார் காமராசர்!

நீர்ப்பாசனத் திட்டத்திற்கு நூறு கோடி ரூபாய் கேட்டோம்; 'அப்படிக் கொடுத்தால் எல்லா மாநிலங்களுக்கும் உணவு தருகிறோம்' என்றோம் ; ஆனால் பக்தவத்சலம், 'டில்லியை எப்படி ரூ. 100 கோடி கேட்கலாம்' எனக் கேட்கிறார்!

அவர்கள், எங்கும்—எதையும் கேட்காது தூங்கினார்கள்! நாங்களும் தூங்க முடியுமா?

வெட்கம் வேண்டாமா?

ஆட்சிமொழிப்பிரச்சினையில் காமராசர் அறைகூவல் விடுகிறார்! அவர் சொல்லுகிறார்—'இந்தி வராது' என்று!

சேத் கோவிந்த தாஸ் சொல்லுகிறார்—'இந்திக்காகப் படை வரும்' என்று!

இவர்களுக்கு உணர்ச்சி—வெட்கம் வேண்டாமா?

இந்தியைக் காமராசரும் பக்தவத்சலமும் உண்மையாகவே எதிர்த்தால், அவர்கள் பின்னால் தொண்டர்களாக நாங்கள் செல்லத் தயாராக இருக்கின்றோம்!

இந்த நாட்டில் சனநாயகம் வாழ—நேர்மை நிலைக்க—உண்மை வழங்க—நல்லாட்சி இருக்க வேண்டும்! அந்த ஆட்சியைத் தான் 1967-ல் ஏற்படுத்தியிருக்கின்றார்கள்!"

Madras State Electricity Board

TENDER NOTICE

SPECIFICATION NO C. 1 39

ENNORE THERMAL SCHEME—Construction of R.C.C. Pile Foundation for the Ash Pumping Station of the Power Station at Ennore near Madras—Specification C. 1039.

1. O. Sealed tenders, in duplicate, superscribed as above will be received by the undersigned, upto 12 00 Noon ON TUESDAY THE 28TH NOVEMBER 1967, for the construction of about 125 (one hundred and twentyfive) numbers of R.C.C. piles each of safe load capacity of about 62.5 Tonnes, driven to a depth of about 50'-0" below pile cap bottom for Ash Pumping Station of the Thermal Power Station at Ennore. The tenders will be opened at 2-30 P.M. in the office of the undersigned on the same day in the presence of such of the tenderers or their representatives as may be present. Tenders received late will be summarily rejected.

2. O. Copies of the Specification No. C 1039 can be had from the Office of the undersigned on application enclosing the receipt for payment, obtained by tendering a sum of Rs. 25.75 (Rupees twentyfive and Paise seventyfive only) by Money Order or cash towards the cost of one copy of the Specification inclusive of Sales tax at 3% to the Accounts Officer, Madras Electricity System (Distribution), 157, Mount Road, Madras-2. The Specification No. C. 1039 should be clearly furnished to The Accounts Officer, Madras Electricity System (Distribution), while making the above payment and in all correspondence. The above amount is not refundable under any circumstance.

3. O The Madras State Electricity Board, does not bind itself to accept the lowest or any of the tenders. The Board reserves the right to reject any tender or all the tenders and also to award the work to more than one tenderer without assigning any reasons therefor.

SUPERINTENDING ENGINEER
Technical (Civil)

157, Mount Road,
Madras-2

சைதை வட்டத் தோழர்கட்கு :

"தென் சென்னை நாடாளுமன்ற இடைத் தேர்தலையொட்டி, சைதை வட்ட தி. மு. கழகத் தோழர்கள், 2—11—67 காலை 9 மணிக்கு வீடுகள்தோறும் சென்று வாக்காளர்களைச் சந்தித்து—கழக வேட்பாளர் முரசொலி மாறனுக்கு வாக்களித்து ஆதரிக்க வேண்டுமெனக் கோருவார்கள்.

"சைதை வட்டத்தைச் சேர்ந்த கழகத் தோழர்களும், கிளைக் கழக நிர்வாகிகளும் அன்று காலை 8 மணிக்கு, தேனும்பேட்டை 'அன்பக'த்திற்கு வந்து சேர்ந்து, அங்கிருந்து புறப்படுவர். நடாளுமன்ற உறுப்பினர்கள் பி. சிவசங்கரன், சி. சிட்டிபாபு, சட்டமன்ற உறுப்பினர்கள் எம்.ஜி.ஆர்., அ. பொ. அரசு, முனு. ஆதி, மு. கோபால், மற்றும் செங்கை மாவட்டக் கழக–சைதை வட்டக் கழகத் தோழர்கள் இதையே அழைப்பாகக் கருதி, வருகைதந்து சிறப்பிக்க வேண்டுகிறேன்"

என, சைதை வட்ட தி.மு.க. செயலாளர் சி. இராமலிங்கம் தெரிவிக்கிறார்.